THE NEW INDIAN EXPRESS

11 APR 2022

PAGE 3

# Univ launches anti-drug drive

EXPRESS NEWS SERVICE @Puducherry

PONDICHERRY University (PU) in association with the Ministry of Social Justice and Empowerment launched the 'Towards a Drug Free Puducherry District' project

The community-based project is under the Ministry's Nasha Mukt Bharat Abhiyaan campaign, and will be implemented over 12 months. The project aims to build sustainable intervention, outlined by Prof R Nalini, principal investigator.

V-C Gurmeet Singh and C Udaya Kumar, Secretary to the Puducherry government (Social Welfare) delivered addresses. Radhika Chakravarthy, Joint Secretary, department of social justice, extended her support. Iftekhar Alam, Assistant Professor & Co-Principal Investigator offered the vote of thanks.

DINAKARAN

11 APR 2022

PAGE 6

### புதுவை பல்கலைக்கழகத்தில்

# போதையில்லா இந்தியா பிரசார திட்டம் துவக்கம்

புதுச்சேரி, ஏப். 11: ஒன்றிய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்துடன் இணைந்து, புதுவை பல்கலைக்கழகத்தின் சமூகப்பணி துறை போதையில்லா புதுச்சேரி மாவட்டத்தை நோக்கி என்ற ஒரு சமூகம் சார்ந்த திட்டமான போதையில்லா இந்தியா பிரசாரம் கடந்த 6ம் தேதி முறைப்படி தொடங்கப்பட்டது. புதுச்சேரி மாவட்டத்தில் போதைப்பொருள் பயன்பாடு மற்றும் மதுப்பழக்கம் போன்ற பிரச்னைகளுக்கு தீர்வு காணும் வகையில், இத்திட்டம் 12 மாத காலத்திற்கு செயல்படுத்தப்படவுள்ளது.

இத்திட்டத்துக்கான துவக்க நிகழ்ச்சியில் சமூக பணித்துறை தலைவர் (பொறுப்பு) அன்பு வரவேற்றார். முதன்மை ஆய்வாளர் நளினி, திட்டத்தின் நோக்கத்தை கோடிட்டு காட்டினார். சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் இணை செயலாளர் ராதிகா சக்கரவர்த்தி இந்த திட்டத்திற்கு தனது ஆதரவினை வழங்கினார். சமூக நலத்துறை செயலர் உதயகுமார் கலந்து கொண்டு பேசுகையில், குழந்தைகள் மற்றும் இளைஞர்களிடையே போதை பொருள் தேவையை குறைக்க கல்லூரிகள், அரசு அதிகாரிகள், சுகாதார வல்லுநர்கள் மற்றும் காவல் துறையினர் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்றார். புலமுதன்மையர்கள் பசந்த் குமார் திவாரி, மொஹந்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். பேராசிரியர் இப்திகார் ஆலம் நன்றி கூறினார். சமூகப்பணி துறை மற்றும் பிற துறைகளின் பேராசிரியர்கள், அறிஞர்கள், மாணவர்கள், புதுவையில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் ஆசிரியர்கள், உள்ளூர் அரசு சாரா நிறுவனங்களின் உறுப்பினர்கள், மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ நிறுவனங்களின் சுகாதார பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

DINAMANI

11 APR 2022

PAGE 5

# புதுச்சேரி பல்கலை.க்கு பசுமை சாம்பியன் விருது



புதுச்சேரி பல்கலைக்கு வழங்கப்பட்ட பசுமை சாம்பியன் விருதுடன் பல்கலை. துணை வேந்தர் குர்மீத்சிங் உள்ளிட்டோர்.

**புதுச்சேரி, ஏப். 10:** மத்திய அரசின் உயர்கல்வித் துறை அமைச்சகம், 2021-22 ஆம் ஆண்டுக்கான மாவட்ட பசுமை சாம்பியன் என்ற விருதை புதுச்சேரி பல்கலைக்கழகத்துக்கு வழங்கி அங்கீகரித்தது.

இந்தப் பல்கலைக்கழகமானது கடந்த 4 ஆண்டுகளாக பசுமை வளாகம், (கிரீன் கேம்பஸ்) என்ற திட்டத்தின் கீழ், பல நிலையான வளர்ச்சி, பருவநிலை மாற்றம் தொடர்பான முயற்சிகளைச் செயல்படுத்தி வருகிறது. இந்த முன்னோடி முயற்சிகளை அங்கீகரிக்கும் வகையில், மகாத்மா காந்தி தேசிய ஊரகக் கல்வி மன்றமானது மத்திய அரசின் உயர்கல்வித் துறை சார்பில், 2021-22 ஆம் ஆண்டுக்கான மாவட்ட பசுமை சாம்பியன் என்ற விருதை வழங்கி, புதுச்சேரி பல்கலைக்கழகத்தை அங்கீகரித்தது.

இந்த விருதை உதவிப் பதிவாளர் கி.மகேஷ், பசுமை வளாக ஒருங்கிணைப்பாளர் எம்.நந்திவர்மன் ஆகியோரிடம் புதுச்சேரி மாவட்ட ஆட்சியர் இ.வல்லவன் வழங்கினார். பின்னர், இந்த விருது துணைவேந்தர் குர்மித்சிங்கிடம் ஒப்படைக்கப்பட்டது.